AL/2019/47/T-I (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

05.08.2019 / 0830 – 1030

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I
இஸ்லாமிய நாகரிகம் I
Islamic Civilization I

47 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளைக் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) இபாதத், இமாரத், கிலாபத் (2) தௌஹீத், ரிஸாலத், மஆத் (3) இஸ்மத், இமாமத், விலாயத்
(4) வராஸத், வக்பு, ஸதகா (5) விலாயத், தஸ்கியத், ஹகீகத்

**2.** கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களால் ஹதீஸ் துறையில் ஈடுபடுத்தப்பட்டவர்,
(1) இமாம் குதைபா பின் ஸஅத் ஆவார். (2) இமாம் ஸுலைமான் பின் ஹர்ப் ஆவார்.
(3) இமாம் ஷிஹாபுதீன் ஸுஹ்ரி ஆவார். (4) இமாம் ஈஸா பின் நஸ்ர் ஆவார்.
(5) இமாம் இஸ்ஹாக் பின் ராகவைஹி ஆவார்.

**3.** கியாஸின் அடிப்படைகளுள் **பர்உ** என்பதன் பொருள் யாது?
(1) சட்டம் (2) பொதுத்தன்மை (3) ஒப்பு நோக்குதல்
(4) ஏகோபித்த முடிவு (5) புதிய விடயம்

**4.** இலங்கையின் சந்தேச இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள யொன்லிய எனும் பதத்தால் அடையாளப்படுத்தப்பட்டவர்கள்,
(1) இலங்கையின் பழங்குடியினர் ஆவர். (2) இந்துப் பெண்கள் ஆவர்.
(3) பௌத்தப் பெண்கள் ஆவர். (4) முஸ்லிம் பெண்கள் ஆவர்.
(5) இந்திய அரச பரம்பரையினர் ஆவர்.

**5.** வானியல் துறையில் 'ஸிஜ்', 'அல்-முஸ்தஉமல்' எனும் சொற்களால் குறிப்பிடப்படுபவை
(1) வானியல் கருவிகள் ஆகும். (2) வானியல் அட்டவணைகள் ஆகும்.
(3) வானியல் நிலையங்கள் ஆகும். (4) வானியல் ஆய்வு கூடங்கள் ஆகும்.
(5) நட்சத்திரங்கள் ஆகும்.

**6.** கீழே **X** நிரலில் நூலாசிரியர்களின் பெயர்களும் **Y** நிரலில் அவர்கள் எழுதிய நூல்களும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 01. இமாம் அபூலைஸ் ஸமர்கந்தி | A - அல் பஹ்ருல் முஹீத் |
| 02. இமாம் ஷாபிஈ | B - அல்-உம்மு |
| 03. இமாம் பக்ருதீன் அர்-ராஸி | C - மபாதிகுல் கைப் |
| 04. இமாம் ஆலூஸி | D - றூஹுல் மஆனி |
| 05. இமாம் அபூஹையான் | E - பஹ்ருல் உலூம் |

**X** நிரலின் கீழுள்ள நூலாசிரியர்களின் பெயர்களுக்கேற்ப **Y** நிரலிலுள்ள அவர்கள் எழுதிய நூல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) B C D E A (2) B E C D A (3) E B C A D
(4) E B C D A (5) E C B D A

[பக். 2 ஐப் பார்க்க

7. சமய நல்லிணக்கத்தைப் பேணும் விதத்தில் நபியவர்களுக்கும் பிற சமூகத்தவர்களுக்கும் இடையே இடம்பெற்ற ஒரு நிகழ்வு

(1) ஹுதைபிய்யா உடன்படிக்கை ஆகும். (2) ஹில்புல் புலூல் நிகழ்வு ஆகும்.
(3) அகபா உடன்படிக்கை ஆகும். (4) நஜ்ரான் மக்களுடனான ஒப்பந்தம் ஆகும்.
(5) கஅபாவில் 'ஹஜருல் அஸ்வத்' வைத்தல் ஆகும்

8. **முஇஸ்ஸுத் தௌலா** எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட ஆட்சியாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய சிற்றரசு

(1) புவைதிகள் (2) ஸபவியர் (3) ஸெல்ஜுக்கியர் (4) பாத்திமீக்கள் (5) ஐயூபியர்

9. குடும்ப நிர்வாகம் தொடர்பில் இஸ்லாமிய வழிகாட்டலாக அமைவது யாது?

(1) குடும்பத் தலைமை ஆண்களுக்கு உரியதாக இருப்பினும், பெண்களின் கருத்தை அறிவது அவசியமானதாகும்.
(2) குடும்பத் தலைமையில் பெண்களுக்கு எத்தகைய பங்கும் கிடையாது.
(3) குடும்ப விடயத்தில் மனைவியின் கருத்தைக் கோருவது கணவனுக்கு அவசியமானதல்ல.
(4) மனைவியின் கருத்தை அறிந்ததன் பின் அதற்கு எதிர்மாறாக நடந்துகொள்வதே சிறந்ததாகும்.
(5) உழைப்பில் ஈடுபடுவது ஆண்களைச் சார்ந்தது. குடும்பத்தைப் பராமரிப்பது பெண்களைச் சார்ந்தது.

10. "பெரும்பாவம் செய்த எவருக்கும் நபியவர்களது ஷபாஅத்தைப் பெற முடியாது." என்ற கருத்தை முன்வைத்த சிந்தனைப் பிரிவு யாது?

(1) அல்-அஷ்அரிய்யா (2) அல்-முர்ஜிஆ (3) அல்-முஃதஸிலா
(4) அல்-ஜபரிய்யா (5) அல்-கவாரிஜ்

11. கண்டி இராஜதானியின் நிர்வாக ஒழுங்கில் முஸ்லிம்கள் பணி செய்த **மடிகே பத்த** என்ற சொல் குறிக்கும் திணைக்களம்

(1) சமையல் பகுதி (2) பாதுகாப்பு (3) மருத்துவம்
(4) கால்நடை பராமரிப்பு (5) மீன்பிடி, போக்குவரத்து

12. "உங்களுடைய மார்க்கம் உங்களுக்குரியது என்னுடைய மார்க்கம் எனக்குரியது" என்ற அல்-குர்ஆன் வசனம் உணர்த்தும் சரியான கருத்து யாது?

(1) ஒவ்வொருவருக்கும் அவரவரது மார்க்கத்தைப் பின்பற்றும் பூரண உரிமை உண்டு.
(2) எவருக்கும் தனது சமய நம்பிக்கையைச் சந்தர்ப்ப, சூழலுக்கேற்ப விட்டுக்கொடுக்க முடியும்.
(3) இஸ்லாத்தை எடுத்துரைப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.
(4) எவருக்கும், அடுத்தவர் சமய நம்பிக்கையில் தலையிட முடியும்.
(5) சமய நம்பிக்கைகள் நிலையானவை அல்ல. அடிக்கடி மாற்றத்திற்கு உட்படுபவை.

13. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - விஞ்ஞானத் துறைகளில் ஐரோப்பாவின் எழுச்சிக்குக் காரணமாக அமைந்தவர்கள் ஸ்பெய்ன் முஸ்லிம்களாவர்.
B - நாடுகாண் பயணி வஸ்கொடகாமாவுக்கு இந்தியா வந்தடைய வழிகாட்டியாக இருந்தவர் இப்னு மஜீத் ஆவார்.
C - ஸ்கண்டிரியாவில் அமைக்கப்பட்டிருந்த வானிலை அவதான நிலையம் உலகின் முதல் வானிலை அவதான நிலையமாகும்.
D - மஞ்சனீக், தபாபா போன்ற யுத்தக்கருவிகளை முஸ்லிம்களே முதலில் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

மேற்குறித்தவற்றுள் சரியான கூற்றுக்களைக் கொண்ட தெரிவு யாது?

(1) A, B (2) B, C (3) C, D (4) A, B, C (5) B, C, D

[பக். 3 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

3531

**14.** மஸ்லஹா அடிப்படையில் பெறப்பட்ட தீர்வுக்கான ஒரு உதாரணம் யாது?
(1) உமர்(ரலி) காலத்தில் குதிரைகள்மீது விதிக்கப்பட்ட ஸகாத் வரி
(2) நாய் நக்கிய பாத்திரத்தை ஏழு தடவைகள் கழுவுவது போல, பன்றி நக்கிய பாத்திரத்தையும் ஏழு தடவைகள் கழுவுவது
(3) மதுவுக்கு வழங்கப்பட்டுள்ள 'ஹராம்' என்ற தீர்ப்பையே போதைப் பொருட்கள் அனைத்துக்கும் தீர்ப்பாகக் கொள்வது
(4) பெண்களுக்கு தங்கம் ஹலாலானது என்ற தீர்ப்பு
(5) அபூபக்கர் (ரலி) அவர்கள் அல்-குர்ஆனை ஒன்று திரட்ட எடுத்த நடவடிக்கை

**15.** இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்கும் விவகாரத்தில் நாட்டு நலனை முன்னிலைப்படுத்தி தனது கருத்தை வலியுறுத்திய பிரமுகர்,
(1) சேர் ராஸிக் பரீத் ஆவார்.
(2) ஏ.எம்.ஏ. அஸீஸ் ஆவார்.
(3) கலாநிதி பதியுதீன் மஹ்மூத் ஆவார்.
(4) துவான் புர்ஹானுதீன் ஜாயா ஆவார்.
(5) டாக்டர் எம். ஸி. எம். கலீல் ஆவார்.

**16.** அல்-குர்ஆனை நூலுருப்படுத்துவதற்காக உஸ்மான் (ரலி) அவர்களால் நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்களுள் ஒருவராக இருந்தவர்
(1) உபை பின் கஅப் (ரலி)
(2) அபூ குஸைமா (ரலி)
(3) அபூ தர்தா (ரலி)
(4) ஹுதைபதுல் யமானி (ரலி)
(5) ஸஈத் பின் ஆஸ் (ரலி)

**17.** பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) இஸ்லாமிய நாகரிகம் மறுமை வெற்றியை இலக்காகக் கொண்டுள்ளது.
(2) அல்-குர்ஆனின் மீதான முஸ்லிமின் முதற் கடமை அதனை ஓதுவது மட்டுமாகும்.
(3) 'இஸ்ராயீலிய்யாத்' என்பது தப்ஸீருடன் புகுத்தப்பட்ட கட்டுக்கதைகளைக் குறிக்கின்றது.
(4) மனித வாழ்வுக்கான வழிகாட்டலை வழங்க மனித அறிவு மட்டும் போதுமானது.
(5) 'ஜாமிஉல் குர்ஆன்' எனும் சிறப்புப் பெயர் ஸைத் பின் ஸாபித் (ரலி)க்கு உரியதாகும்.

**18.** பின்வருவனவற்றைக் கருதுக.
A - அரேபியர் ஒதுக்கப்படல்
B - துருக்கியர் செல்வாக்கு
C - சிற்றரசுகளின் தோற்றம்
D - பைதுல் மால் துஷ்பிரயோகம்
E - வாரிசுகளின் ஒழுங்கீனம்
F - கர்பலா நிகழ்வு
G - அஹ்லுல் பைத்களுக்கே ஆட்சியுரிமை

மேலுள்ளவற்றுள் அப்பாஸியர் வீழ்ச்சிக்கு வழியமைத்த காரணிகளை கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) A, C, E (2) A, E, F (3) B, C, F (4) B, D, G (5) E, F, G

**19.** ஆலமுல் பர்ஸக் என்பதன் கருத்து
(1) மீள் எழுப்பப்படுவது
(2) கருவறை வாழ்வு
(3) மறுமை வாழ்வு
(4) மண்ணறை வாழ்வு
(5) சுவன வாழ்வு

**20.** கீழே **X** நிரலில், இஸ்லாமிய சீர்திருத்தத்துடன் தொடர்புடைய ஆளுமைகள் சிலரது பெயர்களும் **Y** நிரலில், அவ்வாளுமைகளோடு நெருக்கமாக அமைகின்ற விடயங்களும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. மௌதூதி (ரஹ்) | A - இக்வானுல் முஸ்லிமீன் |
| 2. இல்யாஸ் (ரஹ்) | B - தீனே இலாஹி மறுதளிப்பு |
| 3. அஹமத் ஸிர்ஹின்த் (ரஹ்) | C - உயைனா |
| 4. ஹஸனுல் பன்னா (ரஹ்) | D - தர்ஜுமானுல் குர்ஆன் |
| 5. முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) | E - காந்தலா |

**X** நிரலுக்கேற்ற விதத்தில் **Y** நிரலில் உள்ள விடயங்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்க
(1) A B C D E
(2) B D A C E
(3) B D E A C
(4) D B A E C
(5) D E B A C

[பக். 4 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**21.** அல்-முஹ்கம் என்பதன் கருத்து யாது?
(1) மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்ட அல்-குர்ஆன் வசனங்கள்
(2) பல பொருளைக் கொடுக்கும் அல்-குர்ஆன் வசனங்கள்
(3) மீட்டி, மீட்டிச் சொல்லப்பட்ட அல்-குர்ஆன் வசனங்கள்
(4) மக்கீ-மதனீ சூராக்களை அடையாளப்படுத்தும் அல்-குர்ஆன் வசனங்கள்
(5) ஒரே பொருளைத் தரும் திட்டவட்டமான அல்-குர்ஆன் வசனங்கள்

**22.** கருத்து வேறுபாடு என்ற விடயத்தில் "இமாம்களிடையே கருத்தொற்றுமை நிலவிய விடயங்களில் நாம் பரஸ்பரம் ஒத்துழைப்போம், கருத்து வேறுபாடு கொண்ட விடயங்களில் பரஸ்பரம் நியாயம் காண முயற்சிப்போம்" என்று கருத்துரைத்தவர்,
(1) முஸ்தபா அஹமத் ஷர்கா ஆவார்.
(2) அஹமத் அர் ரைஸூனி ஆவார்.
(3) இமாம் ரஷீத் ரிழா ஆவார்.
(4) முஸ்தபா பின் கராமா ஆவார்.
(5) மௌலானா அபுல்ஹஸன் அலி நத்வி ஆவார்.

More Past Papers at
tamilguru.lk

**23.** அல்-குர்ஆன் கணவன்-மனைவிக்கு இடையிலான பரஸ்பர உறவை எப்பொருளுக்கு உவமையாகக் குறிப்பிட்டுள்ளது?
(1) ஆடை (2) இல்லம் (3) உணவு (4) கற்பு (5) வாகனம்

**24.** கீழே **X** நிரலில் ஸஹாபாக்களின் பெயர்களும் **Y** நிரலில் அவர்களுடன் தொடர்புபட்ட சில நிகழ்வுகளும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. ஜஃபர் பின் அபீதாலிப் (ரலி) | A - அகழி யுத்தத்தின்போது ஆலோசனை நல்கியவர் |
| 2. முஸ்அப் பின் உமைர் (ரலி) | B - மதீனாவுக்கு அனுப்பப்பட்ட பிரசாரகர் |
| 3. மஆத் பின் ஜபல் (ரலி) | C - ஹுதைபிய்யா உடன்படிக்கையை முஸ்லிம்கள் தரப்பில் எழுதியவர் |
| 4. அலி பின் அபீ தாலிப் (ரலி) | D - அபீசீனியாவுக்கான ஹிஜ்ரத் |
| 5. ஸல்மான் பாரிஸி (ரலி) | E - யெமனுக்கு ஆளுனராக அனுப்பப்பட்டவர் |

**X** நிரலுக்கேற்ப **Y** நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமான வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
(1) A B C D E (2) A C D E B (3) D B E C A
(4) D C B A E (5) E A B C D

**25.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A. நபியவர்கள் காலம் முதலே இலங்கையில் ஹாஸிமீக்கள் காணப்பட்டனர் என்று 'புதூஹுல் புல்தான்' என்ற நூல் குறிப்பிடுகின்றது.

B. இலங்கை மன்னன் அக்ரபோதி இஸ்லாம் பற்றி அறிந்து வர, நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடம் தனது தூதுவர் ஒருவரை அனுப்பினான் என இப்னு ஸஹ்ரயார் குறிப்பிடுகின்றார்.

C. பொலன்னறுவை இராஜதானியில் மன்னனின் ஆலோசகர்களாக நான்கு முஸ்லிம்கள் பணியாற்றியதாகக் குறிப்பிடப்படும் கருத்தை பேராசிரியர் எஸ். பரணவிதாரண ஏற்றுக்கொண்டுள்ளார்.

D. இலங்கை மன்னனால் கலீபா வலித் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அன்பளிப்புப் பொருட்கள், இந்திய மன்னன் ஒருவனால் கொள்ளையிடப்பட்டமையே சிந்து நோக்கிய முஸ்லிம்களின் படையெடுப்புக்குக் காரணமாக அமைந்தது என அல் - இத்ரீஸி கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்தவற்றுள் சரியான கூற்றினை / கூற்றுக்களைக் கொண்ட தெரிவு யாது?
(1) D (2) A, B (3) B, C (4) C, D (5) B, C, D

[பக். 5 ஐப் பார்க்க

**26.** பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) நபிமார்கள் வரலாற்றிலே 'தீன்' எப்போதும் ஒன்றாக இருக்க, 'ஷரீஅத்' மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது.
(2) பாத்திமீக்கள், பக்தாதைத் தமது தலைநகராகக் கொண்டிருந்தனர்.
(3) 'மங்கா' வின் 'சித்தாந்த' என்ற வானியல் நூலை, அபூமஹ்ஷர் என்பவர் அறபியில் மொழிபெயர்த்தார்.
(4) மன்னன் மகா பராக்கிரமபாகுவின் பிரதிநிதியாகவே, அபூ உஸ்மான் எகிப்துக்குத் தூதுவராக அனுப்பப்பட்டார்
(5) ஹதீஸ்களைத் தரம் பிரித்துப் பார்க்கும் மரபு ஸஹாபாக்கள் காலம் முதலே வழக்கில் இருந்துள்ளது.

**27.** இலங்கை - அரேபியர் உறவு தொன்மையாகவும் இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகத்தில் அரேபிய முஸ்லிம் வர்த்தகர்களின் ஈடுபாடு பலமானதாகவும் இருந்தபோதிலும், இலங்கை முஸ்லிம்களிடையே அரேபிய முஸ்லிம் கலாசாரம் **நிலைபெறாமைக்கான** மிகப் பொருத்தமான காரணம்
(1) அரேபியர், இலங்கையைத் தற்காலிக இருப்பிடமாக மட்டுமே வைத்துக்கொண்டமை
(2) வர்த்தகத்தில் ஈடுபாடு காட்டிய அரேபியர்கள் தமது கலாசார, பாரம்பரியங்களை அறிமுகப்படுத்துவதில் ஆர்வம் காட்டாமை
(3) அரேபியர்களைத் தொடர்ந்து இலங்கையில் தென்னிந்திய முஸ்லிம்களின் செல்வாக்கு பலமடைந்து, அவர்களின் செயற்பாடுகள் சமய செயற்பாடுகளாக முன்னிலைப்படுத்தப்பட்டமை
(4) இலங்கை முஸ்லிம்கள் காலனித்துவ ஆட்சியின்போது சமய, சமூகத்துறைகளில் அடக்கியொடுக்கப்பட்டமை
(5) அறபு மொழியிலமைந்த இஸ்லாமிய அறிவுக் கருவூலங்களில் இலங்கை முஸ்லிம்கள் பரிச்சியம் அடையாமை

**28.** உலகம் உருண்டையானது என்பதைக் கண்டறிந்து, அதன் சுற்றளவைக் கணிப்பதற்கு வாய்ப்பாடொன்றை முதன் முதலில் அறிமுகப்படுத்திய முஸ்லிம் அறிஞர்,
(1) அல்-பிரூனி என்பவராவார்.
(2) அல்-ஹுவாரிஸ்மி என்பவராவார்.
(3) அல்-முகத்தஸி என்பவராவார்.
(4) மாஷா அல்லாஹ் என்பவராவார்.
(5) அபூ ஸஈத் அஸ்-ஸன்ஜரி என்பவராவார்.

**29.** அறபு நாட்டில் யூத மதம் அறிமுகமாவதற்குக் காரணமாக இருந்த குழுவினர்
(1) நுழைர், குறைஷ், ஸகீப்
(2) நுழைர், குறைஷ், குரைழா
(3) குறைஷ், கைனூகா, ஸகீப்
(4) கைனூகா, ஸகீப், குறைஷ்
(5) குரைழா, கைனூகா, நுழைர்

**30.** பின்வருவனவற்றுள் அறிஞர் சித்திலெப்பையினால் எழுதப்பட்ட நூல்
(1) இறையும் மறையும்
(2) அஸன்பே சரித்திரம்
(3) சாந்தி மார்க்கம்
(4) தொழுகை அடவு
(5) பத்ஹுத் தயான்

**31.** இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் பாதுகாப்புக்காக முதன் முதலில் கடற்படையை நிறுவியவர்,
(1) கலீபா முஆவியா (ரலி) ஆவார்.
(2) கலீபா ஹாறூன் அல்-றஷீத் ஆவார்.
(3) கலீபா ம.்மூன் ஆவார்.
(4) கலீபா உஸ்மான் (ரலி) ஆவார்.
(5) கலீபா வலீத் பின் அப்துல் மலிக் ஆவார்.

**32.** **ஸின்தீக்கள்** எனப்படுவோர் யாவர்?
(1) ஹதீஸ் அறிவிப்பாளர்கள்
(2) இஸ்லாத்தின் எதிரிகள்
(3) ஹனீப்கள்
(4) பைஸாந்தியர்
(5) நாஸ்திகர்

**33.** பின்வருவன முஸ்லிம் சமூகத்தினரிடையே வழக்கில் இருந்து வரும் சில சொற்களாகும்.
A - தஸ்கியா
B - முரீத்
C - இல்லத்
D - முகல்லித்
E - ஷெய்கு
F - ஹழரா
G - இஸ்மத்
H - அவ்ராத்

மேலுள்ளவற்றுள் **தஸவ்வுப்புடன்** தொடர்புபடும் சொற்கள் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, E, F, H
(2) A, C, E, G, H
(3) A, D, E, F, H
(4) B, C, D, E, F
(5) C, E, F, G, H

[பக். 6 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**34.** பின்வருவன நாகரிகங்கள் தொடர்பான சில கூற்றுகளாகும்.

A - மெசபொதேமிய நாகரிகம் ஈராக்கின் பபிலோனியாவைத் தலைநகரமாகக் கொண்டிருந்தது.

B - பிர்அவ்ன்களின் ஆட்சி இடம்பெற்ற எகிப்தில் அரசர்கள் தெய்வ வழித்தோன்றலாகக் கருதப்பட்டனர்.

C - இம்மை, மறுமை இரண்டினதும் வெற்றிக்கான வழிகாட்டல்களை இஸ்லாமிய நாகரிகம் கொண்டுள்ளது.

D - உரோம நாகரிகத்தின் அறிவியற் துறைக்கான பங்களிப்பை நல்கியவர்களாக சோக்ரடீஸ், அரிஸ்டோட்டில், பிளேட்டோ ஆகியோர் கருதப்படுகின்றனர்.

E - பாப்பரசர் இரண்டாம் சில்வெஸ்டர், ஸ்பெய்னில் தங்கியிருந்து இஸ்லாமிய நாகரிகம் தொடர்பாகக் கற்றுத் தேர்ந்து, தன் நாடு திரும்பிய அவர் அவற்றைத் தன் மக்களிடம் முன்வைத்தபோது, மக்களால் இன்முகத்துடன் வரவேற்கப்பட்டார்.

மேற்குறித்தவற்றுள் சரியான கூற்றினை / கூற்றுக்களைக் கொண்ட தெரிவு யாது?

(1) C (2) E (3) B, D (4) A, B, E (5) A, C, E

**35.** X, Y எனும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. Y நிரலில் உள்ளவை X நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன.

| X | Y |
|---|---|
| 01. தஃவிலுல் அஹ்காம் | A - தெளிவான சட்டம் |
| 02. இபாரதுன்னஸ் | B - தெளிவான சட்டத்திலிருந்து பெறப்படும் மறைமுக சட்டங்கள் |
| 03. ஸபபுன் நுஸூல் | C - சட்டங்களுக்கான காரணங்களைத் தெளிவுபடுத்தல் |
| 04. இஷாரதுன்னஸ் | D - அல்-குர்ஆன் வசனங்கள் இறக்கப்பட்டமைக்கான காரணங்கள் |
| 05. இக்திலா உன்னஸ் | E - தெளிவான சட்டத்திலிருந்து பெறப்படும் முடிவுகள் |

X நிரலுக்கேற்ப Y நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமான வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.

(1) A B C D E (2) B C A E D (3) C A D B E
(4) C A D E B (5) D E C A B

**36.** பின்வருவனவற்றைக் கருதுக.

A - ரப்பானிய்யத்
B - முல்கிய்யத்
C - உமூமிய்யா
D - ஸுமூலிய்யா
E - அக்லிய்யா
F - வாகிஇய்யா
G - ஹாகிமிய்யா

மேலுள்ளவற்றுள் இஸ்லாமிய ஷரிஆவின் பண்புகளைக் குறிக்கும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, B, D, E (2) A, C, D, F (3) A, C, F, G
(4) B, C, D, E (5) B, D, F, G

**37.** நபியவர்கள் மதீனாவில் தனது அரசை நிறுவியதும் வேறுபட்ட காலப்பகுதிகளில் வெவ்வேறான குழுக்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டார்கள். இதற்கான பிரதான காரணம்

(1) எதிரிகள் தன்னை பகைத்து விடலாம் என்ற அச்சம்
(2) கட்டாயமாக யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி மறைமுகமாகத் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் யுத்த தந்திரம்
(3) எதிரிகளின் எதிர்ப்பைத் தடைப்படுத்தித் தனது பணியான தஃவாவை முன்கொண்டு செல்லல்
(4) வாக்குறுதி பேணல் என்ற பண்பைப் பலப்படுத்தி மக்களிடையே அச்சமற்ற சூழலை ஏற்படுத்தல்
(5) யுத்தத்தினூடாக மனித உயிர்களை வெற்றிகொள்வதை விட உடன்படிக்கையூடாக வெற்றிகொள்ளும் முயற்சி

[பக். 7 ஐப் பார்க்க

**38.** துருக்கிய இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தவர்,
(1) பிரடெரிக் மன்னன் ஆவார். (2) சார்ள்ஸ் மன்னன் ஆவார். (3) ஹுலாகுகான் ஆவார்.
(4) முஸ்தபா கமால் ஆவார். (5) மூன்றாம் பிலிப் ஆவார்.

**39.** **காலித் பின் பகாயா** என்ற பெயரிலான கல்வெட்டு, இலங்கையின் எந்தப் பகுதியில் அமையப்பெற்ற முஸ்லிம் குடியேற்றத்துக்கு ஆதாரமாக அமைகின்றது?
(1) வெலிகம (2) கொழும்பு (3) பேருவளை
(4) புத்தளம் (5) திருகோணமலை

**40.** கீழே **X** நிரலில் ஹதீஸ் துறையோடு தொடர்புடைய இமாம்களின் இயற்பெயர்களும் **Y** நிரலில் அவர்கள் மக்களிடையே பிரபல்யம் பெற்ற பெயர்களும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 01. முஹம்மது இப்னு இஸ்மாயில் | A - அந்நஸாயி |
| 02. முஸ்லிம் பின் ஹஜ்ஜாஜ் | B - அபூதாவூத் |
| 03. ஸுலைமான் பின் அஸ்அஸ் | C - திர்மிதி |
| 04. முஹம்மத் பின் ஈஸா | D - முஸ்லிம் |
| 05. அபூ அப்துர் ரஹ்மான் அஹமத் பின் ஸுஐப் | E - புஹாரி |

**X** நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இமாம்களின் இயற்பெயர்களுக்கமைய **Y** நிரலை ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான விடைத் தொகுதியினைத் தெரிவுசெய்க
(1) A C D E B (2) A C B E D (3) A D E C B
(4) E B A C D (5) E D B C A

**41.** **மகாஸிதுஷ் ஷரீஆவின்** மூன்று பிரதான படிநிலைகளையும் காட்டும் தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) இபாதத், இமாரத், கிலாபத் (2) இபாதத், முஆமலாத், ஜினாயாத்
(3) இமாமத், தகீய்யத், இஸ்மத் (4) தஸ்கிய்யத், தரீக்கத், ஸலாமத்
(5) ழுரூரிய்யாத், ஹாஜிய்யாத், தஹ்ஸீனிய்யாத்

**42.** இஸ்லாமிய வழக்கில் **தஜ்தீத்** எனும் பதம் சுட்டும் கருத்து
(1) நவீன சிந்தனைக்கேற்ப இஸ்லாத்தை வடிவமைத்தல்
(2) சமூகத்தில் எழும் பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய வழிகாட்டலில் தீர்வு காணுதல்
(3) இஸ்லாத்தில் கலந்துள்ள இஸ்லாமல்லாதவற்றை நீக்கி, இஸ்லாத்தை அதன் ஆரம்ப நிலைக்கு மீட்டெடுத்தல்
(4) இஸ்லாமிய வணக்க வழிபாடுகளில் புதிய விடயங்களைச் சேர்த்தல்
(5) நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளை வாழ்வில் பின்பற்றி நடத்தல்

**43.** அல்-குர்ஆனின் முதல் வசனம் நபியவர்களை வந்தடைந்த சரியான ஒழுங்கு யாது?
(1) லவ்ஹுல் மஹ்பூல் → பைதுல் இஸ்ஸா → ஜிப்ரயில் (அலை) → ஹிராக் குகை
(2) லவ்ஹுல் மஹ்பூல் → பைதுல் இஸ்ஸா → ஜிப்ரயில் (அலை) → ஸௌர்க் குகை
(3) பைதுல் இஸ்ஸா → லவ்ஹுல் மஹ்பூல் → ஜிப்ரயில் (அலை) → ஹிராக் குகை
(4) பைதுல் இஸ்ஸா → லவ்ஹுல் மஹ்பூல் → ஜிப்ரயில் (அலை) → ஸௌர்க் குகை
(5) ஜிப்ரயில் (அலை) → பைதுல் இஸ்ஸா → லவ்ஹுல் மஹ்பூல் → ஸௌர்க் குகை

**44.** ''வெள்ளிக்கிழமைகளில் ஜுமுஆ நேரத்தில் வர்த்தகம் செய்யக்கூடாது'' என்ற சட்டத்தில் **'மகாஸிதுஷ் ஷரீஆ'** ஆகக் கணிக்கப்படும் விடயம் யாது?
(1) வெள்ளிக்கிழமைகளில் வர்த்தகம் செய்யலாகாது.
(2) ஜுமுஆ நேரத்தில் வர்த்தகத்திலிருந்து ஒதுங்கியிருந்து, ஏனைய நேரங்களில் வர்த்தகத்தில் மும்முரமாக ஈடுபட வேண்டும்.
(3) வணக்க வழிபாடுகளுக்குத் தடையாக வர்த்தகமோ, ஏனைய எதுவுமோ அமையலாகாது.
(4) ஜுமுஆத் தொழுகையில் கட்டாயம் கலந்துகொள்வதுடன், ஜுமுஆ நிறைவடைந்ததும், வேகமாகச் சென்று வர்த்தகம் செய்ய வேண்டும்.
(5) ஜுமுஆவில் விருப்பமுள்ளவர்கள் அதில் கலந்து கொள்ளலாம், ஏனையோர் தத்தம் விருப்பப்படி வர்த்தகம் செய்து விட்டு, தௌபாச் செய்து கொள்ளலாம்.

[பக். 8 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**45.** பின்வருவனவற்றுள் **இஜ்மாஉஸ்ஸரீஹ்** தொடர்பான சரியான கூற்று,
(1) இஜ்மாஉஸ்ஸரீஹ், இஜ்மாஉ அக்ஸரிய்யா ஆகிய இரண்டும் ஒரே கருத்தைக் கொண்டவையாகும்.
(2) இஜ்மாஉஸ்ஸரீஹ் என்பது இஜ்மாஉஸ்ஸுகூத்திக்கு முரண்பட்டது.
(3) இஜ்மாஉஸ்ஸரீஹ் ஏற்பட குறிப்பிட்ட காலத்தில் உயிர்வாழும் முஜ்தஹித்கள் அனைவரும் கருத்துப் பரிமாற வேண்டும்.
(4) இஜ்மாஉஸ்ஸரீஹ் ஏற்பட ஆஹாதான ஹதீஸ்களை விட முதவாதிரான ஹதீஸ்களே ஆதாரமாக அமைதல் வேண்டும்.
(5) இஜ்மாஉஸ்ஸரீஹ், முதவாதிர் தரத்திலான ஹதீஸ்களுக்குச் சமமானது.

- **46** தொடக்கம் **50** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகள் பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கம் (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | சரியானது | பிழையானது |
| (3) | பிழையானது | பிழையானது |
| (4) | பிழையானது | சரியானது |
| (5) | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | ஒரு சமூகத்தில் பெரும்பாலானோர் தமது வாழ்வில் சொல், செயல் ரீதியாகப் பின்பற்றிவரும் மரபுகள் 'உர்பு' எனப்படுகின்றன. | தஃவாப் பணியை இலகுபடுத்துவதுடன் மனதைத் திடமாக வைப்பதும், அல்-குர்ஆன் ஒரே தடவையில் முழுமையாக அருளப்படாமைக்குரிய காரணமொன்றாகக் கருதப்படுகிறது. |
| **47.** | "தஜ்லா நதிக்கரையில் ஒரு ஆட்டுக்குட்டி சரிந்து விழுந்தாலும் அதற்குப் பதில் கூறுவதும் எனது பொறுப்பாகும்" என ஆட்சியாளனின் பொறுப்பை எடுத்துக்காட்டியவர் உமர் (ரலி) ஆவார்கள். | ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டில் ஹஜ் விதியாக்கப்பட்டபோது ஹாஜிகள் குழு நபியவர்களின் தலைமையிலேயே மக்கா நோக்கிப் பயணமானார்கள். |
| **48.** | அக்ரப், அத்தைர், நாதிர் போன்றன முஸ்லிம் வானிலை அறிஞர்களால் நட்சத்திரங்கள் சிலவற்றுக்கு வைக்கப்பட்ட பெயர்களாகும். | ஷீஆக்களிடையே மிகக் கூடிய எண்ணிக்கையும் செல்வாக்கும் கொண்டவர்கள் இஸ்மாஈலிய்யா பிரிவினராவர். |
| **49.** | உமையாக் காலத்தில் அறபு எழுத்தணிக்கலை வளர்ச்சிக்கு இஸ்ஹாக் மற்றும் வஹ்ஹாப் எனும் சகோதரர்கள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். | முஸ்லிம்களும் யூதர்களும் தத்தம் சமயத்தை முழுமையாகப் பின்பற்றலாம். என்ற விதியை மதீனா சாசனத்தில் கண்டுகொள்ள முடியும். |
| **50.** | ஸஹாபாக்கள் காலத்தில் அல்-குர்ஆனிலிருந்து மட்டுமே இஜ்திஹாத் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுவது தவறாகும். | நபிமார்கள், ரஸூல்மார்களின் வருகை முற்றுப் பெற்றுள்ளவாறு முஜ்தஹித்களின் வருகையும் முற்றுப் பெற்றதாகவே உள்ளது. |

* * *

More Past Papers at tamilguru.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

| | |
|---|---|
| ඉස්ලාම් ශිෂ්ටාචාරය | II |
| இஸ்லாமிய நாகரிகம் | II |
| Islamic Civilization | II |

47 T II

06.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) நபியவர்களுக்கு, அல்-குர்ஆன் பகுதி பகுதியாக அருளப்பட்டமைக்கான காரணங்கள் **நான்கினைத்** தருக.

(ii) அல்-குர்ஆனின் தொகுப்புப் பற்றிக் குறிப்பிட்டு, உஸ்மான் (ரலி) அவர்களது காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொகுப்பின் நன்மைகள் **இரண்டினை** விளக்குக.

(iii) போலி ஹதீஸ்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணிகள் **நான்கினைத்** தந்து, அவற்றுள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக.

(iv) சமய, சமூக நல்லிணக்கம் தொடர்பாக நபியவர்களின் வழிகாட்டல்கள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக.

(v) நீர் வாழும் சூழலில் சமய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **நான்கினைத்** தெளிவாக விளக்குக.

(4× 5 =20 புள்ளிகள்)

**2.** (i) ஒரு தனிமனிதன் தனக்கும் தன் இரட்சகனுக்குமிடையே தொடர்பைப் பலப்படுத்திக் கொள்வதால் ஏற்படும் நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) மனித சட்டத்துக்கும் இறை சட்டத்துக்குமிடையிலான வேறுபாடுகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக.

(iii) மகாஸிதுஷ் ஷரீஆவின் ழுரூரிய்யாத் பகுதியில் உள்ளடங்கும் **ஆறு** அம்சங்களையும் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக.

(iv) கியாஸ் சட்ட மூலாதாரத்தின் **நான்கு** அடிப்படைகளையும் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக.

(v) தபஉத்தாபிஈன்கள் கால தப்ஸீர் துறைப் பங்களிப்பை மதிப்பீடு செய்க.

(4× 5 =20 புள்ளிகள்)

**3.** (i) முஸ்லிம்கள் வானியல் துறையில் ஈடுபடுவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) மருத்துவத்துறையில் முஸ்லிம்களது கண்டுபிடிப்புகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக.

(iii) மு·.தஸிலாக்களின் **நான்கு** பிரதான கோட்பாடுகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக.

(iv) பைதுல் ஹிக்மா, அறிவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினை** மதிப்பீடு செய்க.

(v) ஷீஆக்களின் **நான்கு** உப பிரிவுகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இஸ்னா அஷரியாக்கள்** பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(4× 5 =20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

## பகுதி II

**4.** (i) 'இஜ்திஹாத், சட்டம் பெறுவதற்கான ஒரு வழிமுறையாகும்' என்பதை அல்-குர்ஆன், அல் - ஹதீஸ் ஆதாரங்களுடன் விளக்குக.

(ii) இஸ்லாமிய நாகரிகம் தேக்கமடைந்தமைக்கான காரணிகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, அவற்றை விளக்குக.

(10× 2 =20 புள்ளிகள்)

**5.** (i) உமையா கிலாபத்தை ஸ்திரப்படுத்துவதில் கலீபா முஆவியா (ரலி) மற்றும் கலீபா அப்துல் மலிக்கின் செயற்பாடுகளை ஒப்பிடுக.

(ii) உமையாக்களிடமிருந்து அப்பாஸியரிடம் ஆட்சி மாறியதை அடுத்து ஏற்பட்ட மாற்றங்களைப் பரிசீலிக்குக.

(10× 2 =20 புள்ளிகள்)

**6.** (i) கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, கருத்து வேறுபாட்டின்போது பேணவேண்டிய ஒழுங்குகளைப் பரிசீலிக்குக.

(ii) கலீபா உஸ்மான் (ரலி) கிலாபத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட முறையைக் குறிப்பிட்டு, அவரது சேவைகளை மதிப்பீடு செய்க.

(10× 2 =20 புள்ளிகள்)

**7.** (i) இலங்கையில் ஆரம்பகால முஸ்லிம் குடியிருப்புக்கள் கரையோரங்களில் ஏற்பட்டமைக்கான காரணங்களைத் தந்து, அவற்றுள் இரு குடியிருப்புக்களை ஆதாரபூர்வமாக விளக்குக.

(ii) இலங்கையின் இறைமையைப் பாதுகாப்பதில் முஸ்லிம்கள் வழங்கியுள்ள பங்களிப்புக்களை மதிப்பீடு செய்க.

(10× 2 =20 புள்ளிகள்)

**8.** (i) பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள கண்ணியம், பாதுகாப்புப் பற்றி விளக்குக.

(ii) ஒரு முஸ்லிம் பிற படைப்புகளுடன் பேணவேண்டிய ஒழுங்குமுறை பற்றி இஸ்லாத்தின் வழிகாட்டலை விவரிக்குக.

(10×2 =20 புள்ளிகள்)

* * *

More Past Papers at tamilguru.lk